# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, சந்திம வீரக்கொடி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, மாச்சு மாதம் 7 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2014 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, சந்திம வீரக்கொடி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

*[2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. (கூட்.) 3/2012*

### *சந்திம வீரக்கொடி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்*

*''சந்திம வீரக்கொடி மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :* முன்னுரை.

*அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாக விருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1**. இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, சந்திம வீரக்கொடி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.* சுருக்கப் பெயர்.

*சந்திம வீரக்கொடி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

***2**. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சந்திம வீரக்கொடி மன்றத்தில் தற்போது உறுப்பினர்களாக வுள்ள அல்லது (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் ''சந்திம வீரக்கொடி மன்றம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.*

2-PL 006514 -800 (2012/01)

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்துக்காகவும் கருத் தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப் பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தேவையிலுள்ள பாடசாலைச் சிறுவர்களுக்கு அவர் களது கற்கைகளைத் தொடர அவர்களை இயலச்செய்ய நிதி ரீதியாக அல்லது வேறுவகையாக உதவுதல் ;

(ஆ) தேவையிலுள்ளவர்களுக்கு உதவிகளை ஏற்பாடு செய்தல்;

(இ) பல்கலைக்கழக மற்றும் வேறு உயர்கல்வி நிறுவனங் களில் கற்கைநெறிகளைப் பின்பற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட தகுதியான மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல் ;

(ஈ) பௌத்த சமய பாடசாலைகள் மற்றும் முன்னிலைப் பாடசாலைகளின் ஆசிரியர்களைப் பயிற்சியளிக்க செயலமர்வு, கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்கு களை நடாத்துவதுடன், சட்டத்தினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமானால் தோதான மாணவரை கல்வி அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் முன்னிலைப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்புகளை வழங்குதல் ;

(உ) தேவையிலுள்ளவர், கைவிடப்பட்டோர் மற்றும் சுகவீன முற்றோருக்கு சக்கர நாற்காலி, கைப்படி, மூக்குக் கண்ணாடிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அத்துடன் உணவையும் வழங்குதலில் உதவுதல் ;

(ஊ) சுயதொழில் நிகழ்ச்சித்திட்டங்களில் சிறப்புரிமை குறைந்த வர்களை ஊக்குவித்தல் ;

(எ) எல்லா மதங்களுக்கும் சொந்தமான மதம்சார் இடங்களை அபிவிருத்தி செய்தல் ; அத்துடன்

(ஏ) கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தாபிக்கப்படும் சமூக செயற்பாடுகளுக்கு உதவுதல்.

*மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப் படுத்துதல்*

**4.** கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும், அத்துடன் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாட்டை உருவாக்காதிருக்கும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படவுள்ள ஏதேனும் விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்படவேண்டிய தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் வேறு நான்கு உறுப்பினர்களைக்கொண்ட (இதனகத்துப்பின்னர் ''குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைக்குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் தாபக உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திம வீரக்கொடி கூட்டுத்தாபனத்தின் குழுவின் முதலாவது தவிசாளராதல் வேண்டும்.

(3) (அ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழுவானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த முகாமைக்குழுவாதல் வேண்டுமென்பதுடன் அது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டுத்தாபனத்தின் குழுவாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழுவானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஒரு ஆண்டுக்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(4) (அ) காப்பாளர்கள் மற்றும் மதியுரையாளர்கள் உட்பட குழுவின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், காப்பாளர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்று ஆண்டு காலப்பகுதியின் முடிவின் பின்னர் மீள்நியமனத்துக்கு அல்லது மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகைமையுடையதாதல் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் துறத்தல், இறப்பு, பதவி, இயலாமை அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் காரணமாக பதவி வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில் குழுவானது கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தெரிவுசெய்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) (ஆ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்காக மட்டும் பதவிவகித்தல் வேண்டும்

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல் மற்றும் முடிவுக்குக் கொண்டுவருதல் ;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் :

ஆயின், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் அதற்கு முரணாகாதவகையில், சபையானது எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள்

அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வகையில் முதலீடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறானதும் அந்நோக்கங்களுக்காக சட்டரீதியாககொள்ளப்படக்கூடியதுமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கெடுக்கவும், விற்கவும் அல்லது வேறுவகையில் பெறவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறாக அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலிலமர்த்துதலும் தொழிலிலிருந்து அகற்றுதலும் ;

(ஊ) இதையொத்த குறிக்கோள்களைக்கொண்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைதலும் ஒத்துழைத்தலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை சரியாகவும் வினைத்திறனாகவும் கொண்டுநடாத்த அவசியமான அல்லது தகுதியாகவுள்ளவாறான எல்லா வேறு செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் அல்லது விசேட பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்து வாக் களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக்கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத் தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களின் பதவி நியதிகள், பதவிதாங்குநர் தமது பதவியிலிருந்து விலகுதல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியி லிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் ;

(ஆ) பதவிதாங்குநர் தவிர்ந்த குழுவின் உறுப்பினர்களின் தேர்ந்தெடுத்தலும் பதவிக்காலமும் அத்துடன் குழுவின் தத்துவங்களும் கடமைகளும்;

(இ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ்செய்தலும் உறுப் பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும் உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை அகற்றுதலும் மற்றும் உறுப்புரிமைக் கட்டணங்களும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும் அதனது நிதியங்களின் கட்டுக்காப்பும் மற் றும் அதனது கணக்குகளின் பேணுதலும் கணக்காய்வும்;

(உ) குழுவின் ஏதேனும் கூட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிமுறைகள் அதற்கான கூட்ட நடப்பெண் அத் துடன் அதில் நடாத்தப்படவேண்டிய அலுவல்கள்; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் (1) ஆம் உட்பிரிவின் விதி யொன்று என்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்களாகவோ, காசாகவோ அல்லது பொருளாகவோ கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத் தாபனத்தால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தின் நிதியத்தில் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின்கீழ் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலிலும் புரிதலிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்படும் எல்லாச் செலவினங்களையும் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் எல்லாவற்றையும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகள் மற்றும் கணக்காய்வு.

**9.** (1) கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும்

நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருளாகும்.

ஆண்டறிக்கை.

**10.** (1) குழுவானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், சமூகசேவை என்னும் விடயத்திற்கு குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும் அத்தகைய அறிக்கையுடன் தொடர்புடைய ஆண்டின் அடுத்துறுகின்ற ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்குகளின் கணக்காய்வு அறிக்கையுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பணங்களுடன் தொடர்புடைய வேறானதொரு கணக்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

**11**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகிய வற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற் குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படு தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**12**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படு தலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், மன்றத் திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான கடன்கள்.*

**13**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாப னத்தின் தவிசாளர் மற்றும் குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான கூட்டுத்தாபனத்தின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனத்திலும் பொறிக் கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்ப மிடுவது, எவரேனுமாள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடு வதிலிருந்தும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம்

*கலைக்கப் பட்டதன்மேல் எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ள வையுமான வேறு சில நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது நேர்முன்னர் குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துவதாதலோ அல்லது பாதிப்பதாதலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்